RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2161

OPEN ACCESS

# அழகிய பெரியவனின் வல்லிசை நாவலில் தலித் அடையாள மறுப்பும் தொழில் மறுப்பும்

க. தேன்மொழி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு மகளிர் கலைக்கல்லூரி, நிலக்கோட்டை, தமிழ்நாடு, இந்தியா.

# Denial of Dalit Identity and Profession in Vallisai Novel by Azhagiya Periyavan

**K. Thenmozhi [a, *]**

[a] Department in Tamil, Government Arts College for Women, Nilakottai, Tamil Nadu, India

* Corresponding Author: bharathithen@gmail.com

Received: 24-08-2022
Revised: 30-09-2022
Accepted: 13-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

From ancient times to modern times, ethnic groups who have been doing the same occupation have been treated as slaves because of their occupations. The words of Thiruvaenkadam, which are of the opinion that the people of the Paraiyar tribe who are involved in scavenging, disposing of dead cows and beating the drum, can get rid of their caste-based job, so that they will be treated equally by the society. This idea is accepted and implemented by many people but the majority of Hindu people are adamant that they should not give up the work done based on their caste. Thiruvaenkadam and Sivamalai insist on getting an education and thereby go for different jobs. In a town a panchayat leader tells his people to get rid of caste-based jobs. But most people don't accept it and they are doing their old jobs again. For tearing the drum case has been filed on Thiruvenkadam and his organization. Finally, the judgment was it is one's own wish to do or not to do his caste-based job. This article points out that their traditional occupations are a barrier to overcome caste stigma.

**Keywords:** Decolonization, Denial of Identity, Occupation, Alienation, Disposal, Sanitization

## முன்னுரை

சமூகத்தில் பல்வேறு இனக்குழுக்கள் இணைந்து வாழ்வது இயல்பென்றாலும் ஏற்றத் தாழ்வுகள் மனிதர்க்கு மனிதர் இழிவுபடுத்தும் நோக்கிலானவை. புதிய சொல்லாடல் உறப்பத்தி அதிகார வர்க்கத்தால் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்ற சூழலில் தலித் சொல்லாடல் மறுப்பும் அதன் மூலமாக தம் இருப்பைச் சாத்தியப்படுத்தும் வகையில் தலித்திய எழுத்தாளர்களாக அடையாளப்படுத்தப்பட்ட படைப்பாளர்கள் சிலர் தம் புதினங்களில் தலித் என்னும் சொல்லாடலை மறுத்து தலித்துகள் பாரம்பரியமாக செய்து வரும் தொழில்களை துறப்பதன் வழி விடுதலை அடைய முடியும் என்பதை உணர்த்துகின்றனர். அவ்வாறான இலக்கியப் படைப்பாளியாகத் திகழ்பவர்களில் சோ. தர்மன், பூமணி, அழகிய பெரியவன், ராஜ்கௌதமன், பாமா, சுகிர்தராணி, இமையம் ஆகியோர் வெளிப்படுகின்றனர். தம்மை குறிப்பிட்ட சாதியாக அடையாளப்படுத்துவதில் உள்ள பிரச்சினையை விட தாழ்த்தப்பட்டவர்கள் என்று அடையாளப்படுத்துவதில் பிரச்சினை உள்ளதாகக் கருதுகின்றனர். அதனால் தம்மை தலித் எழுத்தாளர் என்று அழைப்பதையும் விரும்பவில்லை. இமையம், சோ. தர்மன், பூமணி போன்ற எழுத்தாளர்கள் தலித் எழுத்து என்று பகுத்துப் பார்ப்பதே அவர்கள் மீதான அசூயையை

வெளிக்காட்டுவதாக கூறுகின்றனர். அடிப்படையில் பேச்சுமொழி உரையாடல்களில் தலித்துகளின் வாழ்வியலில் பயன்படுத்தப்படும் சொற்களைக் கொண்டே தம் புதினங்களைப் படைத்துள்ளனர். அச்சொல்லாடல்கள் வழியே அவர்களது வாழ்வு வெளிப்படுகிறது. தலித் என்னும் அடையாளத்தை ஏற்படுத்துபவை அவர்கள் காலங்காலமாக செய்து வரும் தொழில்களே என்னும் கருத்தினை உள்வாங்கியவராக தன் வல்லிசை என்னும் புதினத்தில் பறையர்கள் தம் தொழிலான பறையடித்தலை கைவிடுதல் வேண்டும் என்ற எண்ணத்தை வெளிப்படுத்துகிறார். கல்வியே மனிதர்களை முன்னேற்றும் கருவி என்றும் கூறுவதாக அமைகிறது. திருவேங்கடம், இராவணேசன் என்னும் பெயர்களில் எதிர்நிலைப் பாத்திர அமைப்பினை வலியுறுத்தி பொதுவெளியில் இராவணன் என்றால் இராமாயணக் கதையின் எதிர்நிலைப் பாத்திரம் என்ற பொய்மையை கட்டவிழ்க்கிறார் எனக் கொள்ளலாம். தலித்துகள் தங்கள் விடுதலையைக் கல்வி மூலமும், மரபான தொழில்களைக் கைவிடுவதன் மூலமும் பெற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராக இராவணேசன் தன் மகனான திருவேங்கடத்தை கல்வி பயில வைக்கிறார் எனக் கூறப்படுகிறது. இக்கட்டுரையானது பாரம்பரியமானத் தொழிலைக் கைவிடுவதன் வழி விடுதலை வாழ்வை அடையலாம் என்னும் கருத்தில் தலித் விடுதலைப் பேசப்படுவது பற்றி கூறப்படுகிறது.

## தொழில் வேற்றுமை

பண்டைக் காலத்தில் தொழில்கள் அடிப்படையில் இனக்குழுக்கள் அடையாளப்படுத்தப்பட்டனர் என்பதை சங்க இலக்கியத்தில் காணமுடிகிறது. தீட்டு, தீண்டாமை என்பன உருவாகியிராத காலமென்றும் அதனைக் கொள்ளலாம் ஆயினும் புலையன், புலைத்தி, இழிசினன் போன்ற சொற்கள் பயன்படுத்தப்படுவதைக் காணலாம். ஆயினும் தீட்டு, தீண்டாமை என்னும் வகையிலான சாதிய ஏற்றத் தாழ்வு காணப்படவில்லை என்பது பெரும்பாலும் அறிஞர்கள் ஒப்புகின்றனர் “சங்க காலத்தில் நிலவிய குடிச் சமூகம் மெல்லத் தரநிலைச் சமூகமாகவும் சுற்று வட்டச் சமூகமாகவும் மாறியது. இது பற்றிய சமூகப் படிமலர்ச்சி தமிழ்ச் சூழலில் இதுவரை விவாதிக்கப்படவில்லை. இனக்குழுச் சமூகத்திலிருந்து நேரடியாக நிலமானிய அமைப்பு வந்து விட்டது என்ற மரபான அவதானிப்பு நம்மிடம் உள்ளது. நிலமானியத்திற்குப் பின்னர் 10-13ஆம் நூற்றாண்டுகளில் சோழர் காலத்தில் சாதியமைப்பு மிகவும் இறுக்கமடைந்தது என்ற அவதானிப்பும் நீண்டகாலமாகத் தொடர்கிறது” (பக்தவத்சலபாரதி, 2018) என்னும் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு சங்க காலத்தில் நிலவிய சுற்றுவட்டச் சமூகத்தை அனுமானிக்கலாம். அதாவது தொழில் அடிப்படையில் வேற்றுமை இருந்ததே தவிர ஏற்றத் தாழ்வு, மேல் கீழ் என்னும் அடிப்படையில் உருவாகியிருக்கவில்லை. எனவேதான் இதனைத் தரநிலைச் சமூகம் என்று அழைக்கிறார். பின்னர் சாதியம் இறுக்கமடைந்ததற்கு பார்ப்பனியத்தின் மேலாதிக்கம் காரணமாகச் சுட்டப்படுகிறது. தலித்கள் அடிமை நிலையில்தான் பண்டைக் காலத்திலிருந்து வாழ்ந்து வருகின்றனர் என்பதை “பெரும்பான்மையினராக உள்ள கீழ் வர்க்க மக்களுக்கு சமூக அந்தஸ்து கிடையாது. உடல் உழைப்பும், பிறரை அண்டிப் பிழைக்கும் வாழ்க்கையும் கொண்டவர்கள். இதனால் தமது தொழிலில் பிறருக்கு அடங்கியவர்கள். கல்வி பெறும் உரிமை மறுக்கப்பட்டவர்கள். சேரி குடியிருப்புக்கள் கீழ் வர்க்கத்தின் பூர்விக வாழ்விடமாக மேல் வர்க்கத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது” என்ற கூற்றில் அடிமைகளாக அண்டி வாழ்வோராக தலித்துகள் வாழ்நிலை காணப்படுவதை அறிய முடிகிறது (Thangaraj, 2006).

## தொழிலைக் களைதலும் சாதிய விடுதலையும்

கல்வியே ஒரு சமூகத்தை முன்னேற்றும். அனைத்துத் தொழில்களிலும் அனைத்துச் சாதியினரும் இடம்பெறல் வேண்டும் என்பதே பொதுவான எண்ணமாக இருக்கின்றன. ஆனால் சாதிய படிநிலைச் சமூகத்தில் குறிப்பிட்ட சாதியினர் குறிப்பிட்டத் தொழில்களைச் செய்து வாழ்வதே நியதியாகக் காணப்படுகிறது. சமூகத்தில் மேல், கீழ் என்னும் சாதிய வேற்றுமை தோன்றி நிலைபெற்று விட்ட சூழலில் சில இனக்குழுக்கள் குறிப்பிட்ட தொழில்களைப் பாரம்பரியமாக செய்துவருபவர்களாக மாற்றப்பட்டனர். அவர்கள் வேறு தொழில்களைச் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. இதனை

வேலையாள் வேற்றுமை எனக் குறிப்பிடுகின்றனர். இத்தகைய தொழில்களிலிருந்து விடுபடுவதே கீழ்மையான தன்மையிலிருந்து அவர்களை மேடிறுத்தும் என்பது அம்பேத்கர் போன்ற அறிஞர்களின் கருத்தாக இருந்தது. பறையடித்தல் தலித்துக்களின் அடையாளமாக இருத்தலால் அதனை அவர்கள் கைவிடுவதற்கு இடைநிலைச் சாதியினரும் மேல் சாதியினரும் அனுமதிக்க மாட்டார்கள் "வரலாற்று ரீதியாகப் பார்த்தால் அந்தந்தச் சாதியின் அந்தஸ்துக்கு ஏற்ப உடை, பரிவட்டம், அணிகலன் அணிவதிலும் திருமணம் முதலிய வைபவங்களில் வைத்துக் கொள்ளக் கூடிய வாத்தியங்களிலும் இன்னும் பலவற்றிலும் அடையாளம் தெரிந்து விடுவதற்காகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்ததும் தெரிகிறது" என்று கூறுகிறார் ராஜ்கௌதமன் (Raj Gowthaman, 2019). இடைநிலைச் சாதியினர் அடித்தள மக்களின் அடையாளங்களைப் பேணுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் செருப்பு அணியக் கூடாது, நல்ல ஆடை அணியக் கூடாது, திருத்தமாக முடி வெட்டக் கூடாது என்பன போன்றவற்றை கடைபிடிக்க வலியுறுத்துகின்றனர். அதுபோல அவர்களது தொழில்களிலிருந்து விலகுவதையும் ஏற்க மறுக்கின்றனர். கல்வி கற்று மேல்நிலைக்கு வரும் தலித்துகள் தம் சாதியினர் செய்து வரும் மரபான தொழில்களை செய்ய மறுக்கின்றனர். அதோடு செய்பவர்களையும் செய்யக கூடாதென தடுக்கின்றனர். ஆனால் பாரம்பரியமாக செய்து வரும் தொழிலைக் கைவிடுவதில் அவர்களுக்குள் சிக்கல்கள் இருக்கின்றன என்பதை அழகிய பெரியவனின் புதினமான வல்லிசை சுட்டுகிறது.

## வல்லிசை - பறை

அழகிய பெரியவன் தொடர்ந்து தலித்துகளின் வாழ்வியலைப் பேசும் நாவல்களை எழுதி வருகிறார். அவருடைய வல்லிசை என்பது பறையடித்தல் தொழில் செய்யும் பறையர்கள் குறித்ததாக அமைகிறது. தோலால் கெட்டிப்படுத்தப்பட்ட பறை இசையானது பழங்காலத்திலிருந்து பறையர் என்னும் குடிகளின் இசையாக இருந்து வருகிறது. பறை என்பது அறிவித்தல் என்னும் பொருளை உடையது. பிறருக்கு பறையறைந்து அறிவித்ததால் அக்குடிமக்கள் பறையர் என்றே அழைக்கப்பட்டனர் "பறையை அடிப்பவர்களுக்குப் பறையர் என்று பெயர் வந்தது. பறை என்பது ஆடு, மாடு, எருமை போன்ற மிருகங்களின் தோலைக் கொண்டும் இரும்பு அல்லது சுட்ட மண்ணால் ஆன சட்டங்களைக் கொண்டும் உருவாக்கப்பட்டவை." (Subramaniyan, 2018) என்னும் கூற்றினால் பறையர் என்போர் காலங்காலமாக செய்திகளை அறிவிக்கும் பணியினைத் தம் பறைக் கருவியினைக் கொண்டு செய்தவர்கள் என்பது அறியலாகிறது. இம்மக்களின் வாழ்வியலைப் பற்றிய வல்லிசை நாவலானது கல்வி கற்று மேற்படிப்புக்குச் சென்று வரும் தலித்துகள் இத்தொழிலை செய்வதைத் தடுக்கப் பாடுபடுவதோடு அத்தொழில்தான் அடிமைத்தனத்துக்கும் காரணம் என்று கண்டுணர்கின்றனர். ஆயினும் தம் மக்களிடம் அத்தொழிலை அடியோடு விட்டு விட கூறியும் அவர்கள் அதைச் செய்வதில்லை. கடுமையான போராட்டங்களை நிகழ்த்திய பின்னும் திருவேங்கடம் தன் வாழ்வில் அத்தொழிலிருந்து மக்களை பிரித்து விட முடிவதில்லை என்பதையே யதார்த்த வாழ்வியலாகச் சுட்டுகிறார் ஆசிரியர்.

## பறையடிக்க மறுத்தலின் அடையாள மறுப்பு

ஒவ்வொரு இனக்குழுவும் தாம் செய்யும் தொழிலால்தான் மதிப்பீடு செய்யப்படுகின்றனர். மனுநீதியின் அடிப்படையில் வர்ண பேதம் கடைபிடிக்கப்படுவது சமூகத்தின் இயல்பாகக் காணப்படுகிறது. வல்லிசை புதினத்தில் பறையடிக்கும் தொழிலை செய்பவர்கள் ஒவ்வொரு நிகழ்விலும் பங்கேற்கின்றனர். அதை லாவகமாக பயன்படுத்தும் நுட்பம் வாய்க்கப் பெற்றவர்கள் என்ற போதிலும் அதுவே அவர்களது அடிமைத் தனத்திற்குக் காரணமாக அமைகிறது. தம் உரிமையை நிலைநாட்டுவதற்கு அத்தொழில் செய்வது தடையாக இருக்கிறது என்று கருதுகிறான் திருவேங்கடம். அவனது நண்பனான சிவலிங்கம் பறைத் தொழிலை விடுவது தம் அடையாளத்தை மறுப்பதற்குச் சமம் என்கிறான். சிவமலை என்பவர்தான் திருவேங்கடத்திற்கு வழிகாட்டியாக இருக்கிறார். முற்போக்கு பத்திரிகைகளை அவனுக்கு அறிமுகம் செய்து படிக்கச் செய்கிறார். அம்பேத்கர், அயோத்திதாசர், பெரியார், ரெட்டைமலை சீனிவாசன் ஆகியோரைப் பற்றி எடுத்துரைக்கிறார். சாதிய இழிவு பற்றி

பல்வேறு கூட்டங்களில் பேசுகிறார். சிவமலையிடம் திருவேங்கடம் கூறுகிறான் சுதந்திரம் வந்துவிட்டால் சாதி ஒழிந்து விடும் அல்லவா என்று அதற்கு சிவமலை "சுதந்திரம் வந்துட்டா எல்லாம் சரியாயிடும். இது விபரீதமானதொரு கற்பனை. இந்தத் தருணத்துல அம்பேத்கர்கிட்டயும் ஈ.வெ. ரா கிட்டயும் மட்டுந்தான் இதுங்களைப் பற்றிய சில தெளிவான திட்டங்கள் இருக்கு. சாதிதான் தேசியப் பிரச்சின. ஆனா அதைப் பற்றி இவங்க ரெண்டு பேரைத் தவிர யாருமே பேசலியே,? நாள்தோறும் ஜாதிக் கொடுமை. சேரியே ஒரு திறந்தவெளி கூண்டுதான். நாளைக்கே சுதந்திரம் வந்தாலும் தாழ்த்தப்பட்ட ஒருவன் சாதியிந்துவோட அடிமைதானே. அப்ப யாருக்குச் சுதந்திரம்" (Azhagiya Periyavan, 2016) என்று கூறுவது இந்தியச் சமூக அமைப்பில் அடிமைகளாக வாழ விதிக்கப்பட்டவர்கள் சுதந்திரத்தைப் பற்றி எண்ண கூடாது என்பது சுட்டப்படுகிறது. அவர்கள் தம் மரபான அடையாளத்தைத் துறந்தால்தான் சுதந்திரம் என்ற எண்ணம் திருவேங்கடத்துக்கு ஏற்படுகிறது. அவனது நண்பனான சிவலிங்கம் தனக்கு வாழ்க்கைத் துணையே இந்தப் பறையடித்தலால்தான் வந்தது என்று அதை விட மறுக்கிறான். திருவேங்கடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சாதியொழிப்பு மாநாட்டில் தலித்துகள் திரளாகக் கலந்து கொண்டிருந்தனர். அங்கு பேசியவர்களில் ஒருவரான சிவமலை தலித்திய இழிவுக்கு உரிய காரணங்களை பட்டியலிட்டுப் பேசுகிறார் "ஒடுக்கப்பட்ட மக்கள் சாதி இழிவிலிருந்து வெளியேற வேண்டும் என்றால் பல தியாகங்களைச் செய்திட வேண்டும். தம்மிடையே உள்ள உட்ஜாதியுணர்வை முதலில் அகற்றிட வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள் மேற்கொள்ளவிருக்கும் ஜாதியொழிப்புப் போருக்கு முன் நிபந்தனையாக அவர்கள் முதலில் தங்களைத் தாங்களே சீர்படுத்திக் கொள்ள வேண்டும். எந்தத் தொழில்கள் நம்மை இழிவு செய்கின்றனவோ எந்தச் சடங்குகளும், மரபுகளும் நம்மை கடையராக்குகின்றனவோ அதைத் தூக்கியெறியுங்கள் பறையடிக்கப் போகாதீர்கள், இறந்து போன மாட்டை அப்புறப்படுத்தாதீர்கள். அதன் இறைச்சியை உண்ணாதீர்கள். சாவுச் செய்தியைச் சொல்லவோ, பிணக்குழி வெட்டவோ, சாக்கடையைச் சுத்தப்படுத்தவோ போக வேண்டாம். சுயமரியாதையுடன் வாழ்வதற்குக் கற்றுக் கொள்ளுங்கள்" (Azhagiya Periyavan, 2016) என்று முழங்குகிறார். இச்சொற்களையே திருவேங்கடம் தம் கொள்கையாக வரித்துக் கொள்கின்றான்.

திருவேங்கடம் பறையடிக்கப் போகக் கூடாதெனவும் இறந்த மாட்டை அப்புறப்படுத்தக் கூடாதெனவும் தன் நண்பர்களுக்கும் தன் ஊர் மக்களுக்கும் கூறுகிறான். ஆனால் அவர்கள் அதை ஏற்று நடப்பது கடினமாக இருக்கிறது. பூங்குடி பஞ்சாயத்தைக் கூட்டி நாட்டாண்மையான முனியப்பனை விட்டு பேச விடுகிறான் திருவேங்கடம். அவன் பேசும் போது "இந்த நாட்டுல எத்தினியோ வகையான ஜனங்க வாழறாங்க. ஆனா நாம மட்டும் எதுக்காகக் கேவலமா நடத்தப்படறோம். இத யாராவது யோசிச்சதுண்டா, யாரோ ஒரு சிலரின் சுயநலத்துக்காக உருவாக்கப்பட்ட இந்த ஜாதிமுறை காலாகாலமாக வழங்கி வர்றதினாலேயே சரியாயிடுமா அதை அப்படியே ஏத்துக்கணுமா? உனக்கும் எனக்கும் இந்த ஜாதிமுறை அவமானத்தையும் இழிவையும் தந்ததில்லாம வேற எதைத் தந்தது. இந்த முறையை கடவுள் ஏற்படுத்தினார் என்றால் அப்படிப்பட்ட ஓரவஞ்சனை கொண்ட கடவுளே நமக்குத் தேவையில்லை. இந்த மதமும் தேவையில்லை" என்று பேசுகிறான் (Azhagiya Periyavan, 2016). இவ்வாறு தாம் இழிவான நடத்தப்படுவதற்குத் தாம் காலம் காலமாக செய்து வரும் தொழில்களும் காரணமாக அமைகின்றன என்று கூறுவதாக அமைகிறது. அதாவது ஜாதி அடிப்படையில் தம்மை இறுத்தி வைத்துள்ளனர் என்று கூறுகின்றான். மேலும் அந்தக் கூட்டத்தில் சில தீர்மானங்களை திருவேங்கடம் வாசித்தான். "இனிமேல் இந்தப் பூங்குளம் கிராமத்திலிருக்கிற யாரும், யாருக்கும் பறைமேளம் அடிக்கப் போகக் கூடாது. இந்த ஊரிலும் இனிமேல் எந்த நிகழ்ச்சிக்கும் மேளம் அடிக்கக் கூடாது. மீறி அடித்தால் மேளம் கிழிக்கப்படும். மேளம் அடிக்கும் வீட்டில் யாரும் திருமணத்துக்குப் பெண்ணையோ பிள்ளையையோ எடுக்கக் கூடாது. ஆண்டைகளின் வீட்டில் செத்த மாட்டை அப்புறப்படுத்துவதோ அதன் இறைச்சியைச் சாப்பிடுவதோ தவறு. யாரும் இதை மீறக் கூடாது. ஜாதி இந்துக்களின் பிணத்துக்குக் குழி வெட்டுவதோ எரியூட்டுவதோ கூடாது.

சாவு சேதி சொல்லப் போவதோ, பாடை கட்டித் தருவதோ தடை செய்யப்படுகிறது. ஜாதி இந்துக்களின் வசிப்பிடங்களில் சென்று சாக்கடையை சுத்தம் செய்வதும் மலக்குழியை சுத்தம் செய்வதும் தடை செய்யப்படுகிறது." என்று கூறுகிறான் (Azhagiya Periyavan, 2016). அம்மக்களின் அடையாங்களாக விளங்கக் கூடியவையே அவர்களின் அடிமைத்தனத்திற்குக் காரணமாக

சுட்டப்படுவதால் அவற்றைக் கைவிட வேண்டும் என்று கூறுகின்றான். ஊரார் அனைவரும் இதற்கு ஒப்புக் கொண்டாலும் சிலர் பிழைப்பிற்கு என்ன செய்வதென்று கேட்க ஆரம்பித்தனர். அதற்கு செத்துப் போடா என்று கோபமாக கூறினாலும் நிதானமாக காரணம் கூறுகிறான் திருவேங்கடம் "வருசம் முந்நூத்தி அறுவத்தஞ்சி நாளும் பொணம் வுளுதா? கல்யாணம் கருமாதி நடக்குதா, இல்ல திருநாள் செய்யிறாங்களா இல்லியே. வேற வேல ஏதாச்சும் செஞ்சாதான் பிழைக்கறதுக்கு இப்ப இந்தத் தொழில்முறைலதான் இருக்குது. மேளமடிக்கிறதும், செத்தமாட்ட தூக்குறதும் சாக்கடையை சுத்தப்படுத்தறதும், நம்மமேல திணிக்கப்பட்ட வேல. அந்தத் திணிக்கப்பட்ட வேலைங்கள இனிமே செய்ய வேணாம்" (Azhagiya Periyavan, 2016)என்று கூறுவதன் மூலம் தாம் பாரம்பரியமாக செய்து வரும் வேலைகள் என்பவை அடிமைத்தனமானவை என்பதை அறியாதவர்களாக மக்கள் இருக்கிறார்கள் என்பதையும் அவர்களுக்கு அதனைப் புரிய வைத்து அதன் மூலம் அவர்களை அத்தொழில்களிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதும் திருவேங்கடத்தின் சிந்தனையாக இதில் வெளிப்படுகிறது. இதில் மேலும் பலரும் தொழில்களை விட்டு விட்டால் பிழைப்பு போய் விடும் என்றும் மேளம் அடிப்பது ஒரு கலை என்றும் அதனைச் செய்யும் போது மனமகிழ்ச்சி பிறக்கிறதென்றும் கூறுகின்றனர். சிலர் திருவேங்கடம் சொல்வதை ஏற்க மறுத்து அவன் மேல் சினம் கொள்ளவும் செய்கின்றனர். "டேய் நீ நேத்துப் பொறந்த புழுக்கடா. வெள்ளையுஞ் சொள்ளையுமா துணி போட்டுன்னு நாலுபேர எங்குந்தோ கூப்டுன்னு வந்துட்டா நீ பெரிய ஆளாடா. நீ போடற கட்டுமானத்துக்கு நா தலவணங்கணுமா? முடியவே முடியாது" (Azhagiya Periyavan, 2016) என்று கூறுகிறான் மாயன். பின்னர் ஊர்ப் பஞ்சாயத்துக்குக் கட்டுப்பட வேண்டும் என்று கூறி விடுகின்றனர்.

திருவேங்கடம் மட்டுமே இதனை செயல்படுத்தும் வகையில் இருக்கிறான். மற்றவர்கள் பிழைப்பிற்காக மேளம் அடிக்க செல்வதைத் தவிர்க்க முடியவில்லை. ஆயினும் தளாராமல் பிற ஊர்களுக்கும் சென்று பறையடிப்பதை தவிர்க்க வேண்டும் எனப் பிரச்சாரம் செய்கின்றான். அங்கும் பிழைப்பிற்கான தொழில் என்றே கூறுகிறார்கள் "பறையடிக்கக் கூடாதுன்னு கூட்டமைப்பு தலைவருங்க பிரச்சாரம் செய்யிறது உங்களுக்கத் தெரியும். எங்க ஊர்ப் பஞ்சாயத்துத் தீர்மானங்கள உங்க ஊருக்குங் கூட எழுத்துப் பூர்வமா அனுப்பியிருக்கிறோம். ஜாதியத்தான் ஒழிக்கக் கூடாதுன்றீங்க. தாழ்த்தப்பட்ட மக்களை சீர்திருத்தம் செய்யக் கூட விடக் கூடாதா? தாராளமாக செய்யுங்க தம்பி வயித்துப் பொழப்புக்கு அவன் அடிக்கிறான். இது ஜாதி எங்க வருவது இது ஒரு கலை தம்பி - நாங்க கலைக்கு எதிரியில்ல இது எங்களை இழிவுபடுத்துது. ஒழிக்க நினைக்கிறோம். கலைன்னு நெனச்சா நீங்க அத வாங்கி அடிங்க" (Azhagiya Periyavan, 2016) என்று கூறுவதன் மூலம் பிற சாதிக்காரர்களிடம் தம் சாதியைச் சார்ந்தவர்கள் பறையடிக்க மாட்டார்கள் என்று கூறுவதும் அதை கலை என்று கூறுவதும் பிற சாதிக்காரர்களை அப்படியென்றால் அக்கலையை நீங்கள் தொடரலாமே என்று கூறுவதும் அவர்கள் அவன் சினம் கொள்வதும் நடைபெறுகிறது.

இவ்வாறு தொடர்ந்து பிரச்சாரத்தில் ஈடுபட்ட போதும் அவனுடைய நண்பனான சிவலிங்கமே பறையடிக்கப் போகிறான். திருவேங்கடம் மற்றும் அவனுடைய கூட்டமைப்பினர் மேளம் அடிப்பவர்களது மேளத்தை பிடுங்கி கிழித்துப் போடுகின்றனர். இது குறித்து வழக்கு நடக்கிறது அதில் தீர்ப்பு கூறும் போது "அன்றாட வாழ்க்கை சீவனத்திற்காக தானே முன்வந்து பறைமேளம் அடிப்பவரை ஆதிதிராவிடர்கள் யாரும் தடுக்கக் கூடாது. பிற சமூகத்தவர் ஆதிதிராவிடர்களை பறை மேளமடிக்கும்படி கட்டாயப்படுத்தக் கூடாது. விரும்பி அடிக்க வரும் ஆதிதிராவிடர்களை மனம் புண்படும் வகையிலோ, சாதியைச் சொல்லியோ பேசி ஆதிதிராவிட மக்களின் உணர்வுகளைப் பாதிக்கும் வகையில் எந்த விதமான நடவடிக்கையிலும் ஈடுபடக் கூடாது" (அழகிய பெரியவன், 2016) என்று தீர்ப்புக் கூறப்படுகிறது. எனவே பலரும் தம் பிழைப்பிற்காக மேளம் அடிப்பதை வழக்கமாகக் கொள்கின்றனர். இது பற்றிய அங்கலாய்ப்பை முருகப்பனும் திருவேங்கடமும் வெளிப்படுத்துவதைத் தவிர வேறொன்றும் செய்து விட முடிவதில்லை என்று புதினம் கூறுகிறது.

## முடிவுரை

தலித்துகள் தங்கள் வாழ்வியல் செயல்பாடுகள் பலவற்றை காலத்திற்கேற்ப மாற்றிக் கொள்கின்றனர். பழங்காலத்தில் சாதிய வேற்றுமைகள் காணப்படவில்லை என்றே பொதுவாக

நம்பப்படுகிறது. தொழில் வேற்றுமைகள் பிற்காலத்தில் சாதிய வேற்றுமைகளாக உருப் பெற்றன. செய்கிற தொழில் அடிப்படையில் அவர்கள் அடிமைகளாகவும் ஆண்டைகளாகவும் மாறுகின்றனர். நிலமில்லாத அண்டி வாழும் வகையினராக தாழ்த்தப்பட்ட மக்கள் இழி தொழில்களைச் செய்து வாழ வேண்டிய நிலைமை காணப்படுகிறது. பண்டைக் காலத்தில் பறையடித்து தகவல்களைக் கூறியவர்கள் பறையர்கள் என்று அழைக்கப்பட்டனர். இன்று வரை சாவுக்கும், திருவிழாவிற்கும், சடங்குகளுக்கும் மேளம் அடிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள் என வல்லிசை புதினம் வெளிப்படுத்துகிறது. இந்தப் புதினத்தில் திருவேங்கடம் கல்வி கற்று தன் சாதியினரை முற்போக்கு பாதையில் நடப்பதற்கு வழிவகை செய்யும் ஒருவனாக இருக்கிறான். அதற்காக பாரம்பரியமாக தலித்துகள் செய்து வரும் தொழில்களைக் கைவிட வேண்டும் என்று கூறுகிறான். அதையே பல்வேறு இடங்களில் பிரச்சாரமும் செய்கிறான். சிலர் ஏற்றுக் கொள்ளவும் பலர் எதிர்க்கவும் செய்கின்றனர். ஆயினும் தன் கருத்தில் நிலையாக இருக்கிறான். ஆனால் தலித்துகளாக ஆதிதிராவிடர்கள் பிழைப்பிற்காக மேளம் அடிப்பதைத் தொடர செய்கின்றனர் எனக் கூறப்படுகிறது.

## References


Azhagiya Periyavan, (2016) Vallisai, Natrinai Pathippagam, Chennai, India

Raj Gowthaman, (2019) Thali Panpadu, New Century Book House, Chennai, India

Subramaniyan, T. (2018) Murasu Paraiyar, Adayalam Pathipagam, Trichy, India

Thangaraj, M. (2006) Nilam Sathiyam, Powtham, Pavai Publications, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License